# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினாஎண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 03 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 12 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 10 | | | |
| 10 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ+கா:

கூத்துகள் நடைபெறும் இடங்களில் ஒன்று ___மட்டக்களப்பு___ .
(மட்டக்களப்பு, வவுனியா, சிலாபம்)

1. வில்லவராய முதலியாரின் மகன் ______________ .

   (சோமசுந்தரப் புலவர், சின்னத்தம்பிப் புலவர், தாமோதரம்பிள்ளை)

2. பனையிலிருந்து ______________ கிடைக்கும்.

   (இளநீர், நுங்கு, தேங்காய்)

3. பழமொழி :- விளையும் பயிரை ______________ தெரியும்.

   (முளையில், வளையில், களையில்)

4. கதிர்காமநாயகத்தால் காட்டிக்கொடுக்கப்பட்ட மன்னன்

   ______________ .

   (சங்கிலியன், கயிலைவன்னியன், பண்டாரவன்னியன்)

5. அறநெறி நூல்களில் ஒன்று ______________ .

   (சிலப்பதிகாரம், புறநானூறு, நாலடியார்)

6. 'புகழ்'என்பதன் எதிர்ச்சொல் ______________ .

   (பொய், இகழ், பிழை)

7. பனிகாலத்தில்______________ ப் பொழுது நீண்டதாக இருக்கும்.

   (காலை, மாலை, இரா)

8. பண்டாரவன்னியன் உயிர் இழந்த இடத்தில் ________________

நாட்டப்பட்டுள்ளது.

(கருங்கல், நடுகல், பாறைக்கல்)

9. நாய் குரைக்கும். அதுபோல் நரி ________________ .

(உறுமும், கத்தும், ஊளையிடும்)

10. **ஒலிவட்டு :-** முரசு கட்டிலில் உறங்கிய புலவர் ________________ .

(சின்னத்தம்பி, மோசிகீரனார், ஔவையார்)

11. தமிழினி ________________ பூ நறுமணம் வீசியது.

(செய்த, வரைந்த, கொய்த)

12. தமிழுக்கு நீண்ட காலம் பணிசெய்ய வேண்டும் என அதியமான்

________________ க் கூறினார்.

(ஔவையாருக்கு, மோசிகீரனாருக்கு, திருவள்ளுவருக்கு)

13. மாட்டுப்பொங்கல் தை ________________ நாள் கொண்டாடப்படும்.

(முதலாம், மூன்றாம், இரண்டாம்)

14. 500 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

(ஐன்னூறு, ஐந்நூறு, ஐஞ்ஞூறு)

15. பாவலன் ________________ பார்த்தான்.

(சுற்றும்முற்றும், ஊண்உறக்கம், சாக்குப்போக்கு)

16. மக்கள் கூடித் தொழில்புரியும்போது ____________________ பாடுவர்.

(தாலாட்டுப்பாடல்கள், காதல்பாடல்கள், குழுப்பாடல்கள்)

17. பலாப்பழம் என்பதைப் பிரித்தால் ____________________ .

(பலா + பழம், பலாப் + பழம், பலா + ப்பழம்)

18. கிரகம்பெல் ____________________ க் கண்டுபிடித்தார்.

(தொலைநோக்கியை, தொலைபேசியை, வானொலியை)

19. அதியமான் ____________________ ப் போற்றும் குணமுடையவன்.

(மன்னர்களை, அமைச்சர்களை, புலவர்களை)

20. தமிழர் தன்மானத்துடன் வாழவேண்டும் என்று வலியுறுத்தியவர்

____________________ .

(பாரதியார், தாமோதரனார், பெரியார்)

| புள்ளிகள் 20 |
|---|

## 2) உறுப்பமைய எழுதுக.

**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.**

______________________________________________

| புள்ளிகள் 03 |
|---|

## 3) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| கொழுகொழு | ~~சலசல~~ | விறுவிறு |
| தாவித்தாவி | சிரித்துச்சிரித்து | பளபள |

எ+கா:

தண்ணீர் சலசல என ஓடியது.

1. குரங்கு ____________ மரத்தில் ஏறியது.

2. நண்பர்கள் ____________ மகிழ்ந்தனர்.

3. பனிக்கரடி ____________ என இருக்கும்.

4. அப்பா ____________ என நடந்து சென்றார்.

5. தேன்மொழியின் பட்டுப்பாவாடை ____________ என

மின்னுகின்றது.

புள்ளிகள் 05

## 4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| நீந்தி | ஆடி | வீசி |
| விழுகின்ற | சிறந்த | ~~விட்டு~~ |

எ+கா:

சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடுகின்றனர்.

1. தம்பி பந்தை ______________ எறிந்தான்.

2. நண்பர்கள் கடலில் ______________ மகிழ்ந்தார்கள்.

3. ஔவையார் ______________ பாடல்களைப் பாடினார்.

4. கனிமொழி நடனம் ______________ முதலாம் இடத்தைப் பெற்றாள்.

5. வெள்ளைப்பூப்போல ______________ பூம்பனி அழகாக இருக்கின்றது.

புள்ளிகள் 05

5) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.

எ+கா:

நல்ல நூல்களைத் தேடிக் ____கற்போம்____ .

பழமொழி :-

1. செய்வன திருந்தச் ________________ .

2. இனியன் பையில் முகவரியைத் ________________ .

3. அதியமான் காட்டில் ஒரு நெல்லி மரத்தைக் ________________ .

4. நாம் பெரியோரை மதித்து நடக்க ________________ .

5. வெண்ணிலாவால் அழகான ஓவியம் ________________ .

6. நான் நாளை எனது நண்பனின் வீட்டுக்குச் ________________ .

புள்ளிகள் 12

6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கி | ளி | இ | த் | தா | லி | அ |
| பி | க | ன | டா | ம | பி | ன் |
| ரி | கா | க | ம் | யி | ன் | ன |
| த் | கொ | க் | கு | ல் | லா | ம் |
| தா | ப | ரு | ந் | து | ந் | நோ |
| னி | சு | வீ | ட | ன் | து | ர் |
| யா | பி | ரா | ன் | சு | | வே |

| பறவைகள் | நாடுகள் |
|---|---|
| எ+கா: கிளி | பிரித்தானியா |
| 1. ______ | 1. ______ |
| 2. ______ | 2. ______ |
| 3. ______ | 3. ______ |
| 4. ______ | 4. ______ |
| 5. ______ | 5. ______ |

புள்ளிகள் 10

7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| ஆடைகளை | காட்சி | பனி |
| செய்தும் | ~~சிறுவர்களுக்கு~~ | அதிகமாக |

பனிகாலம் சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த காலம். இக்காலத்தில் சிறுவர்கள் பனிப்பாவை __________ பனியில் சறுக்கியும் விளையாடி மகிழ்வர். பனிகாலத்தில் மலைகள்மீது பூம்பனி படிந்து இருப்பது கண்கொள்ளாக் __________ ஆகும். இக்காலத்தில் குளிர் __________ இருக்கும். மார்கழி, தை, மாசி மாதங்களில் __________ கூடுதலாகக் கொட்டும். பனிகாலத்தில் மக்கள் வெளியே செல்லும்போது பனிகால __________ அணிந்து செல்வர்.

புள்ளிகள் 10

8) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.

எ+கா:

இனியனை / மிகவும் / பாராட்டினார் / காவலர்

காவலர் இனியனை மிகவும் பாராட்டினார்.

1. அழைக்கப்பட்டது / என்று / வன்னி / அடங்காப்பற்று

______________________________.

2. உயரமாக / வளரும் / மரம் / பனை

______________________________.

3. மீன் / கடலுக்குப் / போனான் / மாறன் / பிடிக்கக்

______________________________.

4. என்றும் / தமிழ் / முத்தமிழ் / அழைக்கப்படும்

______________________________.

5. வேண்டும் / இருக்க / நாம் / பொய் / சொல்லாது

______________________________.

புள்ளிகள் 10

## 9) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கிளி ஓர் அழகான பறவை. கிளி மரப் பொந்துகளில் வாழும். கிளி பல நிறங்களில் காணப்படும். கிளி கூட்டம்கூட்டமாகப் பறந்து செல்லும். சிலர் கிளிகளை வீட்டில் வளர்ப்பர். கிளி பழங்களை விரும்பி உண்ணும். கிளியின் குரல் இனிமையாக இருக்கும். கிளி கீகீ எனக் கத்தும். அதற்குப் பேசப் பழக்கினால் இனிமையாகப் பேசும். தாயகத்தில் பச்சை நிறக் கிளிகளைக் கூடுதலாகக் காணலாம். வண்ணவண்ணக் கிளிகளை விலங்ககத்தில் காணலாம்.

**எ+கா:**

எது ஓர் அழகான பறவை?
கிளி ஓர் அழகான பறவை

1. கிளி எங்கே வாழும்?

_______________________________________________.

2. கிளி எவற்றை விரும்பி உண்ணும்?

_______________________________________________.

3. கிளியின் குரல் எப்படி இருக்கும்?

_______________________________________________.

4. எது கீகீ எனக் கத்தும்?

_______________________________________________.

5. வண்ணவண்ணக் கிளிகளை எங்கே காணலாம்?

_______________________________________________.

புள்ளிகள் 10

## 10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15